1994 நவம்பர் 8]

கொடுமுடியில் ஒரு கிளைச் சிறைச்சாலை வைப்பீர்களானால் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கரூர் பகுதியும் அங்கே இருக்கிறது. அதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதையும் சொல்லி மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து வருகிற நிதி ஆண்டிலாவது இப்படிப்பட்ட ஒரு நிலையை எங்களுக்கு உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எந்தக் குறிப்பும் இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எந்தக் குறிப்பும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இல்லை என்ற சொல்லை இல்லாமல் செய்யக்கூடிய ஒரு ஆற்றல் மிகுந்த, நினைத்ததை முடிக்கக்கூடிய ஆதிபராசக்தியினுடைய பொன்னான ஆட்சியிலே, வருகிற நிதி ஆண்டில் பொது மக்களுடைய நலன்களைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலையை அனுசரித்து, பொது நிலையை உணர்ந்து, எங்களுக்கு இப்படிப்பட்ட ஒரு கிளைச் சிறைச்சாலையை உருவாக்கித் தருகிற எண்ணம் இருக்கிறது என்பதை மக்கள் அறியக்கூடிய விதத்திலே எங்களுக்கு ஒரு உறுதி மட்டும் தந்தால் போதும். அந்த உறுதியையாவது வருகிற நிதி ஆண்டிலாவது தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு நிதிநிலை விவாதத்தின்போது இந்தக் கருத்தை வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

42—

அவினாசி தொகுதியில் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

***10460—டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதியில் பதிவாளர் அலுவலகம் (Registrar Office) அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[*1994 நவம்பர் 8*

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவினாசியில் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்கனவே இயங்கி வருகிறது. இது தவிர புதிதாக சார்பதிவாளர் அலுவலகம் அமைத்திட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் *10-05*

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலகால விஷத்தைக் கக்கிய சேஷனை வதம் செய்து உலகைக் காத்தான் கண்ணன் அன்று; இன்றைக்கு அக்கிரமக்காரர்களுக்கு தடை விதித்து தமிழகத்தைக் காத்துக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், அவினாசி, பல்லடம் போன்ற நகரங்களிலுள்ள விசைத்தறியாளர்களுக்கு சுமார் 12½ கோடி ரூபாய் அளவிற்கு மின்சார சலுகை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய அன்னை, புரட்சித் தலைவி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகலந்த வணக்கங்களைக் கூறிக்கொண்டு, அவினாசி தொகுதி என்பது சேவூர் ஒன்றியம், அன்னூர் ஒன்றியம், அவினாசி ஒன்றியம் என்று மூன்றாகப் பிரிக்கப்பட உள்ளது. சேவூர் பகுதி மட்டும் தனி ஒன்றியமாகப் பிரிக்கப்பட்டால், அவினாசியின் அளவிற்கு பொது மக்கள் அதிகமாக இருப்பதால், அங்கு விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைய பேர் வந்து பதிவு செய்கின்றார்கள். அந்தவகையில் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால், சேவூரில் அடுத்த ஆண்டிலாவது கூடுதலாக ஒரு பதிவு அலுவலகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவினாசி சார் பதிவாளர் அலுவலகத்தில் இப்போது *2,389* ஆவணங்கள்தான் ஒரு ஆண்டுக்குப் பதிவாகின்றன. *2,389* என்பது மிக அதிகமில்லை. அலுவலகத்திலே அதை குறிப்பிட்ட நேரத்திலே பதிவு செய்து கொடுத்துவிடுகிறார்கள். பொதுமக்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை என்றுதான் எனக்கு குறிப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே அந்த அலுவலகத்தில் தாமதம் ஏதாவது ஏற்படுமானால்,

1994 நவம்பர் *8*]

அதைத் தெரிவித்தால், அந்தத் தாமதம் இல்லாமல் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *43*, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

43--

திருப்பத்தூர் மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துதல்

***27805*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தாலுகா நல மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருப்பத்தூர் தாலூகா மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படும்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தாலூகா மருத்துவமனை என்பது வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலே உள்ள மிகப் பெரிய தாலுகா மருத்துவமனையாகும். அங்கே ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான குழந்தைகள் சிகிச்சைக்கு வருவதால், இந்த ஆண்டிலாவது அதை உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதற்காக மருத்துவர் அங்கே மாற்றப்பட்டுவிட்டார். அங்கே உடனடியாக இதற்கான தனிப் பிரிவை துவக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி.